RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt20420

OPEN ACCESS

# சங்க இலக்கிய தோழி கூற்றுப்பாடல்களில் இற்செறிப்பு

## மா. திருமுருகன் [அ, *]

[அ] தமிழ்த்துறை, பாரதியார் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர், தமிழ்நாடு இந்தியா

# Irceṟippu (Protective Seclusion) in the Friend's Songs in Sangam Literature

## M. Thirumurugan [a, *]

[a] Department of Tamil, Bharathiar University, Coimbatore, Tamil Nadu, India

* Corresponding Author: thirumuruganbuasct@gmail.com

Received : 26-05-2020
Accepted : 05-09-2020

**ABSTRACT**

Sangam literary poems constitute a rich repository that records the lifestyle, culture, customs, and ethical practices of ancient Tamil society. Among the various characters portrayed in these works, the thozhi (female companion) occupies an indispensable position. She plays a significant role throughout the stages of love, from clandestine premarital relationships (kalavu) to married life (karpu). As one of the foremost characters in Akam literature, the companion serves as a trusted support to both the hero and heroine. She understands the heroine's secret love and guides it toward a socially accepted marital union. The companion's role is particularly crucial in transitional situations such as varaivu kadaathal (arranging marriage), araththodu nitral (adherence to virtue), and udanpokku (elopement or union), where her involvement is indispensable. This article examines the references and representations of irceṟippu (protective seclusion or confinement imposed upon young women) found in the poems voiced by the companion in Sangam literature.

**Keywords:** Kalavu, Karpu, Heroine, Sangam Literary

## முன்னுரை

சங்க இலக்கியப் பாடல்கள் மாந்தர்களின் வாழ்வியல் நெறிகளையும், பண்பாடு, பழக்கவழக்கங்களையும் தொகுத்துத் தருகின்ற ஒரு தொகுப்பு பெட்டகமாகும். அவ்விலக்கியங்களில் இடம்பெற்ற மாந்தர்களில் தோழி இன்றியமையாதவள். களவு வாழ்வு முதல் கற்பு வாழ்வு வரை பெரும்பங்கு வகிப்பவள். அகத்திணை மாந்தர்களில் முதன்மையானவள். தலைவன் தலைவிக்கு பெருந்துணையாகவும் தலைவியின் களவு வாழ்க்கையை அறிந்து அதனை கற்பு வாழ்க்கைக்குக் கொண்டு செல்பவள். வரைவு கடாஅதல், அறத்தோடு நிற்றல், உடன்போக்கு ஆகிய திருப்புமுனைகளாக அமையும் துறையில் தோழியின் பங்கு தவிர்க்கப்படாத ஒன்றாகும். அத்தகைய தோழி கூற்றுப்பாடல்களில் இற்செறிப்பு பதிவுகள் குறித்து இக்கட்டுரையில் காண்போம்.

## சங்க இலக்கியத்தில் தோழி

தோழி எனும் சொல்லாடலை ஆராயும்போது “தோளன், தோளி என்பன முறையே தோழன், தோழி என்று திரிந்தன. உறுப்பின் பெயரால் மக்கள் முறைப்பெயர் பெறுதல் தமிழ்மொழியில் உண்டு. கண் போன்றவர் கணவன், தலை போன்றவன் தலைவன். இவ்வாறு தோள் என்ற உறுப்பின் பெயரால் தோழன், தோழி என்ற பெயர்கள் தோன்றின” (தேவநேயன். தமிழ் வரலாறு. ப. 75) என்று தேவநேயன் தனதுநூலில் குறிப்பிடுகின்றனர்.

தொல்காப்பியர் 75 சூழல்களில் தோழி கூற்று நிகழத்துவதாக குறிப்பிடுகின்றார். சங்க இலக்கியத்தில் இடம்பெற்றுள்ள தோழி கூற்றின் எண்ணிக்கையில் அறிஞர்களிடையே பலவிதமான கருத்துகள் நிலவியுள்ளன. "வ.சுப.மாணிக்கனார் 842 என்றும், டாக்டர் பெரிய கருப்பன் - 785 பாடல்கள் என்றும், ஈ.கோ.பாஸ்கரதாஸ் 785 பாடல்கள் என்றும் இரத்தினம் - 780" என்றும் குறிப்பிடுகின்றனர்.

## இற்செறிப்பு

சங்க இலக்கியத்தில் தலைவனை குறியிடத்தில் சந்திக்கும் தலைவியை சில சமயம் அலரின் காரணமாக வீட்டில் தங்கியிருக்குமாறு தாய், தந்தை மற்றும் தமர் காவல் செய்வது இற்செறிப்பு எனப்படும். இதனை தொல்காப்பியர், "தமர் தற் காத்த காரண மருங்கினும்" என்று குறிப்பிடுகின்றனர். இதனை வெளிப்படையாக காணும்போது அடக்குமுறைபோல தோன்றும். ஆனால், இது தலைவன் தொடர்ந்து குறியிடத்தில் தலைவியை சந்தித்தால் களவு வாழ்வில் வேட்கைகொண்ட தலைவனுக்கு வரைவு குறித்த சிந்தனை வராமல் போகும். எனவே, தலைவனுக்கு இச்சிந்தனை எழவதற்கு இற்செறிப்பு பாடல்கள் பெரும் துணையாக இருக்கிறது.

## இற்செறிப்பு பாடல்களில் கூற்றுக்குரியோர்

தோழி மற்றும் தலைவி இற்செறிப்புக் கூற்றுக்குறியோர் "தலைவி தான் அடைந்த இன்னல்களைத் தோழியிடம் பகிர்ந்து கொள்வதே நெஞ்சத்திடம் கூறும் நிலையிலும் தலைவிகூற்று நிகழும். இதற்கு குறுந்தொகையில் 305, 306, 401 ஆகிய பாடல்களை சான்று பகரலாம். தோழியின் கூற்றானது தலைவனிடம் நேரடியாகவோ, சிறைப்புறமாகவோ இச்செறிப்பினைக்கூறி வரைவுநோக்கி நகர்த்தும் முயற்சியினை மேற்கொள்ளும் வகையில் எடுத்தாளப்பட்டுள்ளது.

இற்செறிப்பும் குறித்த பதிவுகள்

இற்செறிப்பு என்ற சொல்லை சங்கப் புலவர்களால் சங்கப் பனுவலில் வெளிப்படையாக சுட்டிக்காட்டவில்லை. துறை வகுத்த சான்றோர்களால் குறிப்பிடப்பட்டுள்ளது. இதனைக் கூர்ந்து நோக்கும் பொழுது துறைவகுத்தோர் தொல்காப்பியரின் செய்யுளுறுப்பின்படி முன்னத்தை தெளிவாக உள்வாங்கி துறை வகுத்துள்ளதை அறியலாம்.

அன்னை அருங்கடி,

தந்தை அருங்கடிக் காவலர் சேர்பதன் ஒற்றி',

அருங்கடிப் படுக்குவர்','செல்லாதீமே'

போன்றசொற்களை இனங்கண்டு இற்செறிப்பு என்று துறை வகுத்துள்ளனர்.

"கடற் கோடு அறுத்த, அரம் போழ் அவ் வளை

ஒன் தொடி மடவரல் கண்டிகும் கொண்க!

நல் நுதல் இன்று மால் செய்தென,

கொன் ஒன்று கடுத்தனள், அன்னை அது நிலையே" (ஐங்.பா. 13)

என்ற பாடல் வரிகளில் 'கொங்கன'; என்ற சொல்லானது நெய்தல்நிலத்தலைவனைக் குறிக்கின்றது. அழகிய வளையல்களையும் பிற தொடிகளையும் அணிந்த, மடப்பம் பொருந்திய என் தோழியின் நல்ல நுதல் இன்று ஒளியிழந்து வேறுபட்டமையால் அன்னை ஐயுற்றதில் இற்செறிப்பு நிகழும் என்பதனை உணர்த்துகிறார்.

தலைவியின் மனநிலை குலைந்திருக்க, தினைப்புனம் காத்தற்கு வாராள் என்றும், கிளியை ஒத்த தலைவியின் குரல் விரட்டுவதற்கு மாறாக அழைப்பதுபோல் உள்ளது என்றும்

கூறி தினைப்புனக் காவலை மறுக்கவும், ஐயுற்று இற்செறிப்பு நிகழ்வதோடு தினைப்புனத்தை விலக்குவதையும்,

"காவலும் கடியுநர் போல்வர்

மால் வரைநாட! வரைந்தனை கொண்மோ!" (ஐங். 289)

என்ற பாடல்களின் மூலம் அறியலாம். மேலும், தாயின் ஐயத்தை கூறி தலைவனை வரைவுக்கு தூண்டுவதாக இப்பாடல்வரிகள் அமைந்துள்ளன.

## இச்செறிப்பு அறிவுறுத்தி வரைவு கடாதல்

தலைவியின் வேறுபாடு கண்டுணர்ந்த தாய் அவளை இச்செறிப்புக்கு ஆட்படுத்துவாள். இதனால். தாய் அறனற்றவள் என்று குறிக்கப்படுவதை,

"ஊதை ஈட்டிய உயர் மணல் அடைகரை

கோதை ஆயமொடு வண்டல் தைஇ

ஓரை ஆடினும் உயங்கும் நின் ஒளி எனக்

கொன்னும் சிவப்போள் காணின், வெண் வேற்

கொற்றச் சோழர் குடந்தை வைத்த

நாடு தரு நிதியினும் செறிய

அருங் கடிப் படுக்குவள், அறன் இல் யாயே" (அகம்.;60)

என்ற பாடலின் மூலம் அறியலாம். வாடைக்காற்று கொண்டு குவிந்த உயர்ந்த மணல் மேடுகளைக் கொண்ட பரந்த கடற்கரைப் பக்கத்தில் மாலையணிந்த தோழியருடன் சிற்றில் புனைந்து ஓரை விளையாடினும், உன் மேனி வருந்தும் என அறப்பண்பு இல்லாத எம்தாய் ஒரு பயன் இன்றியும் சினம் கொள்வாள். அத்தகைய எம் அன்னை, தலைவன் பகற்குறி வருவதை அறிந்தால் வெல்லும் வேலையையுடைய வெற்றி பொருந்திய சோழ மன்னர் குடந்தை என்னும் ஊரின்கண் பாதுகாத்து வைக்கப்பட்ட பகைவர்நாடு திறையாகத்தந்த நிதியைக் காட்டிலும் மிகவும் அரிய பாதுகாப்பினை செய்வாள். இத்தகைய பண்பினையுடைய அன்னையை "அறன்இல் யாயே" என்கிறாயே என்கிறாள். குறியிடத்தில் சந்திக்க இயலாதபடி இச்செறிப்பு நிகழ்வதைக் காணலாம்.

அதேபோல் குறியிடம் செல்லாதீர் என்று தலைவியின்தாய் குறிப்பிடுவதை "பல், கால் வரூஉம் தேர் என சொல்லாதீமோ என்றனள் யாயே". (ஐங்.186) அதாவது, நெய்தல் துறையில் ஒரு தேர் பலகாலும் வந்து செல்வதனைக் கூறி அருகே 'செல்லாதீர்' என அறிவுறுத்தினால் களவின்கண் தேரூர்ந்து வருவாள். இதனை "தேரும் யானையும் குதிரையும் பிறவும் ஊர்ந்தனர் இயங்கலும் உரியர் என்" (தொல்.பொருள்.209) களவு காலத்தில் தலைவியைக் காணச்செல்லும்போது தேர், யானை, குதிரை செலுத்துதலும் உரியன என்று சுட்டுவதினால் தலைவி இச்செறிப்புக்கு ஆளாக்கப்பட்டாள் என அறிந்து துறை வகுக்கப்பட்டுள்ளது எனலாம்.

தலைவனின் வேட்கையும் தலைவியின் இச்செறிப்பு நிலையும் உணர்ந்து தோழி வரைவு கடாய்வதாக

"குறித்த இன்பம் நினக்கு எவன் அரிய?

வெறுத்த ஏஎர் வேய் புரை பணைத் தோள்,

நிறுப்ப நில்லா நெஞ்சமொடு நின்மாட்டு

இவளும், இனையள் ஆயின், தந்தை

அருங்கடிக், காவலர் சோர் பதன் ஒற்றி" (அகம். 2)

என்ற பாடலில் களவு வாழ்வில் வேட்கை கொள்ளாதே குறிஞ்சி தலைவனே என்பதனை உணர்த்துகிறார். வேங்கை மலரும் காலம் என்று சுட்டுவதினால் அது தினைக்கதிர்கள் அறுவடை செய்யும் காலம் என்பதையும், தலைவி புறத்தே செல்லாமல் இச்செறிப்புப் பெற்றாள் என்பதையும் உய்துணரலாம். மேலும், “அருங்கடிக் காவலர் சோர்பதன்” என்பதனின்வழி தந்தையின் காவலில் சோர்வு அடைபவர் அல்ல என்ற குறிப்பு மொழியை கையாளுவதனால் அவளை இரவுக்குறியிலும் சந்திக்க முடியாது என்பதகையும் அறியலாம். அதேபோல “திங்களும் ஊர் கொண்டன்று” என்பதன்வழி வளர்பிறை திருமணத்திற்கு உகந்தநாள் என்பதையும் வேற்றார் மணம் முடிப்பதற்கு முன் வரைவு மேற்கொள்ளவும் என்பதை உணர்த்தப்படுகிறது. அதேபோல தலைவியின் தந்தையின் காப்பு மிகுதியைக் குறிப்பதாக,

“கொடியோர் குறுகும் நெடி இருங் குன்றத்து
இட்டுஆறு இரங்கும் விட்டுஒளிர் அருவி
அருவரை இழிதரும் வெருவரு படாஅர்க்
கயந்தலை மந்தி உயங்குபசி களைஇயர்
பார்ப்பின் தந்தை பழச்சுவை தொடினும்
நனிநோய் ஏய்க்கும் பனிவர் அடுக்கத்து
மகளிர் மாங்காட்டு அற்றே - துகள் அறக்
கொந்தோடு உதிர்த்த கதுப்பின்
அம்தீம் கிளவிந் தந்தை காப்பே” (அகம் 288)

என்ற பாடல் அமைகின்றது. குறிஞ்சி நிலத்தின் வளமையும் தலைவனின் பெருமையும் குறிப்பிட்டுள்ளார். தலைவன் இரவுக்குறியில்வரும் வழியானது ஆறலைக் கள்வராகிய கொடியோர் நிறைந்திருக்கும் பெரிய குன்றமாகும். அந்தக் குறுகிய வழியில் அருவியின் முழங்கும் ஒலியின் இடையிட்டுக் கேட்கும், மென்மையான தலைவியினுடைய மந்தியின் பசியினைப் போக்க ஆண்குரங்கின் கடுவன் முயல்வதாக குறிப்பிடுவதை இதில் சுட்டப்பட்டுள்ளது. ஆண், பெண் குரங்குகள் முறையே தலைவன், தலைவியின் குறிப்பெனலாம். இதில்சுட்டப்பெறும் ஆண் மலையில் உள்ள பலாப்பலத்தின் சுளையைத் தோண்டி எடுத்தாலும் அங்குள்ள தெய்வத்தால் துன்பம் உண்டாகும் என அவ்விடத்தின் தன்மையைக் கூறுகிறார். மகளிர் வாழும் மாங்காடு என்னும் ஊரானது மிகுதியான காப்பினை உடையது எனச் சுட்டிக்காட்டுவது தலைவியின் பெருமையை மாங்காடு போன்ற காப்பினை உடையது என்பதை; உணர்ந்து பகற்குறியின்கண்வரும் தலைவனிடம் தோழி வரைவு கடாவதை அறியலாம். இத்தகைய வரைவு கடாவுதல் உள்ள உளவியல் பார்வையில் பண்பாட்டு உணர்ச்சிக்கு உட்பட்டதாகும். மேலும், களவொழுக்கத்தில் வந்தொழுகுவதும் புறத்தூண்டலால் ஏற்படக்கூடியது. ஆனால், தலைவியின் வரைவானது அகத்தூண்டலால் அமைவதை தோழிகூற்றின் வழியாக அறியலாம்.

## முடிவுரை

சங்க இலக்கியப் பாடல்களில இற்செறிப்பு என்ற சொல்லாடலை பயன்படுத்தவில்லை. அச்சொல்லை துறை வகுத்த சான்றோர்கள்தான் பயன்படுத்தியுள்ளனர் ‘அன்னை அருங்கடி, தந்தை அருங்கடி; காவலர் சேர்பதன் போன்ற சொற்களைக் மையமாக கொண்டு இற்செறிப்பு என்று குறிப்பிட்டுள்ளனர். அகத்திணை மாந்தர்களில் மிகவும் இன்றியமையாதவராக இருப்பவள் தோழியே. அத்தோழி கூற்றில் இடம்பெற்ற இச்செறிப்புப் பாடல்களில் பெரும்பாலும் களவு வாழ்வை அடுத்த நகர்வான வரைவை நோக்கியே கொண்டு செல்வதாக அமைந்துள்ளது. அதாவது, வரைவு கடாதலை வலியுறுத்தும் வண்ணமே இப்பாடல்கள் அமைக்கப்பட்டுள்ளன. இதில் அலர், அம்பல் இன்றி, களவுவொழுக்கத்தைக் காப்பதே தோழியின் உச்சநிலை மனப்பாங்காக உள்ளதை இக்கட்டுரையின் வாயிலாக அறிய முடிகிறது.

## References

Thevaneyan, G. (2021). Thamizh Varalaaru, Poompuhar Pathippakam, Chennai.

Ilambooranar (2003). Tholkaappiyam: Porulathikaaram, Saradha Pathippakam, Chennai

Saaminaathaiyar, U.V., (2013). Aganaanooru Moolamum Uraiyum, U.V. Saaminaathaiyar Nool Nilaiyam.

Saaminaathaiyar, U.V., (2013). Ingkurunooru Moolamum Uraiyum, U.V. Saaminaathaiyar Nool Nilaiyam.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2020. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License